**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.226/2024 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. சந்திரசேகர் |
| Husband/Father Name | சுந்திரமூர்த்தி |
| Village /Area | வாலாஜாப்பேட்டை |
| Taluk | இராணிப்பேட்டை |
| Occupation | மதுபானக் கடை சூப்பர்வைசர் |
| Age | 55 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.09.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 30.01.2024 அன்று மாலை 7.00 மணியளவில் புன்னை மதுபானக் கடையில் விற்பனையாளர் பாலசுப்ரமணியம், சிவகுமாரும், பாபுவும் பணியிலிருந்த போது பாலசுப்ரமணியம் எனக்கு போன் செய்தார். அவர் கடையில் பணிபுரிந்து கொண்டிருந்த போது ஒரு நபர் கத்தியை காட்டி மிரட்டி பணத்தை எடுத்துச் சென்று விட்டார் என்று தகவல் சொன்னார். இது குறித்து நெமிலி காவல் நிலையம் சென்று மதுபானக் கடையில் பணம் கொள்ளை அடிக்கப்பட்டதை குறித்து அதசா.1 சிவகுமார் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக நெமிலி போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

30.01.2024 அன்று மாலை 7.00 மணியளவில் சம்பவம் நடந்தது. சம்பவம் குறித்து எனக்கு தகவல் கொடுத்தது பாலசுப்ரமணியம்

தான். சம்பவ சமயத்தில் நான் கடையில் இல்லை. சம்பவ தினத்தன்று நான் மதுபானக் கடை எண்.11014 என்ற கடைக்கு சூப்பர்வைசராக பணி செய்து வந்தேன். சம்பவ சமயத்தில் எத்தனை பேர் கடைக்கு வந்தார்கள் என்று பாலசுப்ரமணியம் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பிறகு கடைக்கு வந்த எத்தனை நபர்கள் எந்த திசையை நோக்கி எந்த வாகனத்தில் சென்றார்கள் என்று பாலசுப்ரமணியம் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை.எனக்கு பாலசுப்ரமணியம் கூறியதன் பேரில் தான் சம்பவத்தைப்பற்றி தெரியும் சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 18:13:14 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.